*All Rights Reserved*
*සියලුම හිමිකම් ඇවිරිණි*

# வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
# மூன்றாம் தவணைப் பரீட்சை - 2020
# இஸ்லாம் / ඉස්ලාම් - 1

சுட்டெண்:................................... தரம் : **10** நேரம்: 1 மணித்தியாலம்

♦ **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

1. சுஹுபுகளின் மொத்த எண்ணிக்கை
   1) 96  2) 100  3) 110  4) 120 ஆகும்

2. பின்வரும் தொழுகைகளுள் பர்ளுகிபாயாவாக அமைவது
   1) பெருநாள் தொழுகை  2) வித்ரு
   3) ளுஹா  4) ஜனாஸா தொழுகை

3. கடைசி அத்தஹிய்யாத்தின் இருப்பு அழைக்கப்படும் விதம்
   1) தவர்ருக்  2) இப்திராஷ்  3) ஸுஜுது  4) ருகூஉ

4. பின்வருவனவற்றில் நஜீஸை சுத்தப்படுத்த பயன் படுத்தக் கூடிய நீரின் வகை
   1) மாஉன் தாஹிர்  2) மாஉன் தஹுர்
   3) மாஉன் முதநஜ்ஜிஸ்  4) மாஉன் நஜீஸ்

5. இஸ்லாமிய சட்டக்கலை நிபுணர் அழைக்கப்படும் விதம்
   1) முஹத்திஸ்  2) முபஸ்ஸிர்  3) மு.ஃமின்  4) பகீஹ்

6. துணை மூலாதாரங்களுள் முதலிடம் வகிப்பது
   1) கியாஸ்  2) குர்ஆன்  3) மஸ்லஹா  4) இஜ்மா

7. மக்காவின் பழைய பெயர்
   1) யத்ரிப்  2) பக்கா  3) கூபா  4) ஜஸீரா

8. குடும்ப உறவின் மூலம் மஹ்ரமி ஆகுபவர்களில் ஒருவர்
   1) சாச்சாவின் மகள்  2) மாமியின் மகள்
   3) தாயின் சகோதரி  4) தந்தையின் சகோதரரின் மகள்

9. சிந்துப் பிரதேசத்தை வெற்றிகொண்ட முஸ்லிம் தளபதி
   1) தாரிக்பின் ஸியாத்  2) முஹம்மத் அல்பாதிஹ்
   3) முஹம்மத் பின் காஸிம்  4) ஹாலித் பின் வலீத் (ரழி)

10. போலி நபிமார்கள் அழைக்கப்படும் விதம்
   1) ரஸுல்  2) நபி  3) முதநப்பி  4) வலி

இவ் வினாப்பத்திரம் சகல சுகாதார பாதுகாப்பு நடைமுறைகளை பின்பற்றி சுகாதார அமைச்சின் வழிகாட்டல்களின் படி அச்சிட்டு, பொதி செய்செய்யப்பட்டு விநியோகிக்கப்பட்டது

11. கழா கத்ர் பற்றிய நம்பிக்கை உள்ளடங்கும் பிரிவு
1) அல் இலாஹிய்யாத் 2) அந் நுபுவ்வாத்
3) அஸ்ஸம் இய்யாத் 4) அர்ரூஹானிய்யாத்

12. வழிகெட்ட அகீதாப் பிரிவு அல்லாதது
1) முர்ஜிய்யா 2) ஷீஆ 3) அஸ்அரிய்யா 4) ஜபரிய்யா

13. பேணுதல் எனும் கருத்தைத் தரும் சொல்
1) ஷுஹ்த் 2) மஹப்பா 3) ரிழா 4) வரஉ

14. மறுமையில் முதலில் விசாரிக்கப்படும் அமல்
1) தொழுகை 2) நோன்பு 3) ஹஜ் 4) சக்காத்

15. பின்வருவனவற்றில் அர்கானுல் கியாஸில் இடம் பெறாதது
1) அஸ்ல் 2) பரஉ 3) ஹுகும் 4) ஷரத்து

16. தயம்முபின் உறுப்பு அல்லாதது
1) முகம் 2) மணிக்கட்டு 3) இருகைகள் 4) காது

17. 'உலுல் அஸ்ம்' எனும் றஸூல்மார்களில் ஒருவர்
1) ஆதம் (அலை) 2) ஈஸா (அலை) 3) யூஸுப் (அலை) 4) யூனுஸ் (அலை)

18. சுருக்கியோ சேர்த்தோ தொழ முடியாத தொழுகை
1) ம∴ரிப் 2) சுபஹ் 3) அஸர் 4) இஷா

19. கலீமுல்லாஹ் எனும் சிறப்புப் பெயருக்குரிய நபி
1) ஆதம் (அலை) 2) ஈஸா (அலை) 3) மூஸா (அலை) 4) இப்ராஹிம் (அலை)

20. உடலோடும் செல்வத்தோடும் தொடர்புபடும் ஒரு இபாதத்
1) தொழுகை 2) நோன்பு 3) திக்ர் 4) ஹஜ்

21. நபிமார்களுக்கு வழங்கப்பட்ட அற்புதம்
1) கராமத் 2) மு∴ஜிஸாத் 3) நுபுவ்வாத் 4) ரிஸாலத்

22. சுன்னத்தான நோன்பு நோற்க அனுமதிக்கபடாத மாதம்
1) ஷவ்வால் 2) ரமழான் 3) துல்ஹஜ் 4) முஹர்ரம்

23. கீழேயுள்ள X மற்றும் Y நிரல்களை ஒழுங்கு படுத்தினால் பெறப்படும் சரியான விடைத் தொகுதி

| X நிரல் | Y நிரல் |
|---|---|
| i) அஹ்லாக் | A. ஈமான் |
| ii) இபாதா | B. வியாபாரம் |
| iii) அகீதா | C. நோன்பு |
| iv) முஆமலாத் | D. பொறுமை |

1) DCBA 2) DCAB 3) DABC 4) DBAC

24. பெரும்பான்மையோரது இஜ்மா அழைக்கப்படும் விதம்
1) இஜ்மா சரீஹ்  2) இஜ்மா அக்ஸரிய்யா
3) இஜ்மா சுஉதி  4) இஜ்மா முரக்கப்

25. வஹி மத்லுவ்வு இல் இடம் பெறுவது
1) அல்குர்ஆன்  2) அல்ஹதீஸ்
3) அஸ்ஸுன்னா  4) அல் கியாஸ்

26. ''காப்பதுன் லின்நாஸ்'' என்பதன் கருத்து நபி (ஸல்) அவர்கள்
1) இறுதி நபி என்பது
2) இறுதித் தூதர் என்பது
3) மனித சமுதாயம் முழுவதற்குமான நபி என்பது
4) அகிலத்தின் அருட்கொடை என்பது

27. 'குத்தாபுல் வஹி' எனப்படுவோர்
1) வஹியை எழுதியோர்  2) வஹியை மனனமிட்டோர்
3) ஹதீஸ்களை அறிவித்தோர்  4) ஹதீஸ்களை பரப்பியோர்

28. 'அஸ்தஸ்கியா' எனும் சொல் குறிப்பது
1) உள்ளத்தைப் பாதுகாத்தல்  2) உள்ளத்தை நேசித்தல்
3) உள்ளத்தைப் பரிசுத்தப்படுத்துதல்  4) உள்ளத்தோடு போராடுதல்

29. இபாதத்தின் நோக்கம் அல்லாதது
1) அல்லாஹ்வுடன் நெருங்குவது  2) சுவனம் நுழைவது
3) அடுத்தவர்களைத் திருப்திப்படுத்துவது  4) தக்வாவை ஏற்படுத்துவது

30. அல்குர்ஆனை ஓதுவதற்குரிய ஒழுங்கு
1) தர்தீபுந் நுஸுல்  2) தர்தீபுத்திலாவத்  3) தர்தீபுல் உஸுல்  4) ஸபபுந்நுஸுல்

31. மக்கா வெற்றி கொள்ளப்பட்ட ஆண்டு
1) ஹிஜ்ரி - 3  2) ஹிஜ்ரி 5  3) ஹிஜ்ரி 6  4) ஹிஜ்ரி 8

32. ஹதீஸைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டுள்ள சொல் யாது?
1) சுவர்  2) சுன்னா  3) அஸர்  4) தப்ஸீர்

33. அல்குர்ஆனில் பெயர்குறிப்பிடப்பட்டுள்ள றஸுல்மார்களின் எண்ணிக்கை யாது?
1) 313  2) 25  3) 124000  4) 5

34. மு.ஃ.தஸிலாக்களது சிந்தனைகளுக்கு எதிராக போராடிய இமாம்களுள் முக்கியமான ஒருவர்
1) இமாம் அஹ்மத்  2) இமாம் அஷ்அரி  3) இமாம் தஹாவி  4) இமாம் மாதுருதி

35. அதிகம் பொய் பேசுவது யாருடைய பண்பு என நபி (ஸல்) அவர்கள் குறிப்பிட்டார்கள்.
1) முஸ்லிம்  2) காபிர்  3) முனாபிக்  4) முர்தத்

36. நோயாளிகளைக் குணப்படுத்தும் அற்புதம் வழங்கப்பட்ட நபி யார்?
1) மூஸா (அலை)  2) ஈஸா (அலை)
3) தாவூத் (அலை)  4) யூஸுப் (அலை)

37. 'யார் தனது உள்ளத்தை சீர் படுத்துகிராரோ அவர் வெற்றி பெற்றுவிட்டார்.' எனும் கூற்று எப்பிரிவில் அடங்கும்

1) ஹதீஸ்
2) இஜ்மா
3) தாபிஈயின் கூற்று
4) அல் குர்ஆன்

38. காதியானிகளின் பிரதான பணிகளுள் ஒன்று

1) தொழுகையை மறுத்தல்
2) நபித்துவத்தை நிராகரித்தல்
3) இறுதி நபித்துவத்தை மறுத்தல்
4) ஹஜ்கடமையை மறுத்தல்

39. எத்தொழுகைகளின் பின்னர் கலிமா தௌஹீத் ஓதப்படும்

1) சுபஹ் - ளுஹர்
2) அஸர் - ம.்.ரிப்
3) சுபஹ் - ம.்.ரிப்
4) ம.்.ரிப் - இஷா

40. தௌபா என்பது

1) சுத்தம்
2) பாவமீட்சி
3) உளப்பரிசுத்தம்
4) தூய எண்ணம்

# வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
# மூன்றாம் தவணைப் பரீட்சை - 2020
# இஸ்லாம் / ඉස්ලාම් - II

சுட்டெண்:.................................... தரம் : **10** நேரம்: 2 மணித்தியாலங்கள்

---

♦ **முதலாம் வினாவுக்கும் விரும்பிய ஏனைய நான்கு வினாக்களுக்குமாக மொத்தம் ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

1. சுருக்கமான விடை தருக.
   1) மஹ்ரமி, அஜ்னபி என்போர் யார்?
   2) இஸ்லாத்தின் பிரதான மூலாதாரங்கள் இரண்டையும் குறிப்பிடுக
   3) வுழூஉக்கு பகரமாக நிறைவேற்றப்படும் செயற்பாடு எது?
   4) யூனானி மொழியில் அருளப்பெற்ற வேதம் எது?
   5) வுழூவின் பர்ளான உறுப்புக்கள் இரண்டைக் குறிப்பிடுக.
   6) ஸீரா என்றால் என்ன?
   7) இமாரத் என்றால் என்ன?
   8) இஜ்மாவின் வகைகள் இரண்டைக் குறிப்பிடுக.
   9) அல்மாஉன் தாஹிருக்கு இரண்டு உதாரணங்கள் தருக.
   10) துஆஉல் இஸ்திப்தாஹ் ஓதப்படும் சந்தர்ப்பம் எது?

(10x2= 20 புள்ளி)

2. 1) அஹ்லுஸ்ஸுன்னா வல் ஜமாஆ என்போர் யாவர்?
   2) அகீதாவின் தூய்மையைப் பாதுகாப்பதற்காக பாடுபட்ட இமாம்கள் மூவரைத் தருக.
   3) அகீதாவில் உட்பிரிவுகள் தோற்றம் பெற்றமைக்கான காரணிகள் ஐந்து தருக.

(2+3+5= 10 புள்ளிகள்)

3. 1) வஸதிய்யா என்றால் என்ன?
   2) வியாபாரக் கொடுக்கல் வாங்கலில் தவிர்க்கப்பட வேண்டிய ஆறு விடயங்களைத் தருக.
   3) ஒரு முஸ்லிமின் அன்றாடச் செயற்பாடுகள் இபாதத்தாக அங்கீகரிக்கப் படுவதற்குத் தேவையான நிபந்தனைகளைத் தருக.

(2+3+5= 10 புள்ளிகள்)

4. 1) பர்ளு ஐன், பர்ளு கிபாயா என்பவற்றை விளக்குக.
   2) ஜாஹிலிய்யா கால மக்களிடம் காணப்பட்ட நற் பண்புகள் 3 தருக.
   3) இஸ்லாமிய பொருளாதார முறைமையின் சிறப்பம்சங்கள் ஐந்துதருக.

(2+3+5= 10 புள்ளிகள்)

5. 1) உடலோடு தொடர்பான இபாதத்துக்கள் இரண்டு தருக.
   2) ஒரு முஸ்லிம் கடைப்பிடிக்க வேண்டிய ஆன்மீகப் பண்புகள் மூன்று தருக.
   3) தௌபாவின் நிபந்தனைகளைத் தருக.

(2+3+5= 10 புள்ளிகள்)

6. 1) இஸ்லாமிய பொருளாதாரத்தின் இரு அடிப்படைகளும் எவை?
   2) வியாபாரத்திற்கான அடிப்படைகளைத் தருக.
   3) இஸ்லாம் வழங்கியுள்ள மனித உரிமைகள் ஐந்து தருக.

(2+3+5= 10 புள்ளிகள்)

7. பின்வருவனவற்றுள் ஏதேனும் இரண்டிற்கு சிறு குறிப்புக்கள் எழுதுக.
   1) கடுமையான நஜீஸை சுத்தம் செய்யும் முறை
   2) உழைப்பின் முக்கியத்துவம்
   3) பிக்ஹுல் அவ்லவிய்யாத்
   4) ஸுஹ்த்

(2x5= 10 புள்ளிகள்)

இவ் வினாப்பத்திரம் சகல சுகாதார பாதுகாப்பு நடைமுறைகளை பின்பற்றி சுகாதார அமைச்சின் வழிகாட்டல்களின் படி அச்சிட்டு, பொதி செய்செய்யப்பட்டு விநியோகிக்கப்பட்டது

This document was created with Win2PDF available at http://www.win2pdf.com.
The unregistered version of Win2PDF is for evaluation or non-commercial use only.
This page will not be added after purchasing Win2PDF.